(2) தகவல் கோரல்.

(அ) பெரியார் அஞ்சல் தலை வெளியிடுவதில் தாமதம் குறித்து.

திரு. மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பெரியார் அஞ்சல் தலை வெளியிட வேண்டுமென்று திராவிட கழகத்தின் சார்பிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலும், இதற்கு முன்பிருந்த அரசின் சார்பிலும், இப்போது இருக்கின்ற அரசின் சார்பிலும் மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி, அப்படி ஒரு அஞ்சல் தலை வெளியிடப்படும் என்ற ஒரு நம்பிக்கையான உறுதி மொழி நமக்கு அளிக்கப்பட்டிருந்தது.

ஆனால், இன்று காலை பத்திரிகைச் செய்தியைப் பார்த்த போது, பாராளும் மன்றத்திலே பதில் அளித்த மத்திய அமைச்சர் அவர்கள் அது மறு பரிசீலனையில் இருக்கிறது, மறு பரிசீலனை செய்யப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார். பெரியார் ஒரு நாத்திகர் என்ற எதிர்ப்பு வந்திருக்கிறது. ஆகவே, அது மறு பரிசீலனையில் இருக்கிறது என்று நம்முடைய நெஞ்சைக் குலுக்கும் வகையில் ஒரு செய்தியை எடுத்துக் கூறியிருக்கிறார்கள். பெரியார் ஒரு நாத்திகர், ஆகவே தபால் தலை வெளியிடப்பட வில்லை என்று சொன்னால், 'நான் ஏன் நாத்திகன் ஆனேன்' என்ற புத்தகத்தை எழுதிய பகவத் சிங் தபால் தலை வெளியிடப்பட்டிருக்கிறது என்பதை மத்திய அரசுக்கு எடுத்துக் காட்டியும், அதேபோல் தன்னுடைய இறுதிகால உயிலில் தானும் ஒரு நாத்திகர் என்ற முறையில் எழுதிச் சென்ற பண்டித நேரு அவர்களுக்குத் தபால் தலை வெளியிடப்பட்டது என்பதையும் மத்திய அரசுக்கு எடுத்துக்காட்டி மீண்டும் பெரியார் தபால் தலை வெளியிட மத்திய அரசுக்கு இந்த அரசு சிபாரிசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியபடி நானும் பத்திரிகையில் பார்த்தேன். மறு பரிசீலனைக்கு ஆளாக்கப்பட்டிருக்கிற இந்தப் பிரச்சினை எந்த அளவுக்கு உள்ளத்தைக் குலுக்குகிற பிரச்சினையாக இருந்தது என்பதை

1978 மார்ச் 10]

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். பதில ளித்த அமைச்சர் இது ஆஸ்திகர்களின் உள்ளத்தைப் புண்படுத்து கிறது என்று குறிப்பிட்டது போன்ற உணர்வை உருவாக்குவது போன்ற வகையில் பதில் சொன்னார்கள்.

இந்தியத் துணைக்கண்டத்தில் வாழ்கிற அத்தனை பேரும் தங் களுக்கென்று கொள்கைகளை வைத்துக் கொள்கிற உரிமையை அவர்கள் பெற்றிருக்கிறார்கள். ஆஸ்திகர்களுக்கு எந்த அளவுக்கு உரிமை உண்டோ அந்த உரிமை நாஸ்திகர்களுக்கும் உண்டு.

அதுமட்டுமல்ல; மதச் சார்பற்ற சர்க்கார் என்று நாம் பெரு மையோடு பேசிக் கொள்கிறோம். அப்படிப் பேசிக் கொள்ளுகிற மத்திய அரசு ஆஸ்திகர்களின் படங்களைத் தபால் தலையில் போட்டுவிட்டு நாஸ்திகர் என்ற முத்திரை பொறித்து தேசியப் போராட்டத்தில் முன்னணித் தளநாயகனாக இருந்த பெரியார் அவர்களின் உருவப் படத்தைத் தபால் தலையில் போட மறுப்பது அல்லது அனுமதி வழங்கிய பிறகு அது மறு பரிசீலனையில் இருக் கிறது என்று தெரிவிப்பது தமிழக மக்களின் உள்ளத்தைப் புண் படுத்துவதாகும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதோடு, மக்களின் உணர்வுகளை, இந்த அவையின் உணர் வுகளை மத்திய அரசுக்கு எடுத்துச் சொல்லி ஏற்கனவே எடுத்துக் கொண்ட முடிவில் மாற்றம் வரக்கூடாது என்பதை இந்த அரசு வற்புறுத்தும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) வினாவிடை நேரம் முடிந்தவுடன் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய பிரச்னை குறித்து.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரம் முடிந்துவிட்டது என்று தாங்கள் கூறியவுடன் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எழுந்து பேசினார்கள். அவர்கள் எந்த விதியின் கீழ் எழுந்து பேசினார்கள்? அது பாயின்ட் ஆப் ஆர்டரா? பாயின்ட் ஆப் கிளாரிபிகேஷனா? அல்லது பாயின்ட் ஆப் இன்பர்மேஷனா? எதிலே கிளப்பினார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்னுடைய அனுமதியைப் பெற்றுப் பேசியதற்குப் பிறகு அதைப் பற்றிய விளக்கம் கேட்பது சரியல்ல.